தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1986, மே 2, வெள்ளிக்கிழமை.

சித்திரை 19, அக்ஷய, திருவள்ளுவர் ஆண்டு 2017.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாலை 4.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"கடலோடா கால்வல் நெடுந்தேர் கடலோடும்
நாவாயும் ஓடா நிலத்து."

வலிய சக்கரங்களையுடைய பெரிய தேர்கள் கடலில் ஓட முடியாது; கடலில் ஓடுகின்ற கப்பல்களும் நிலத்தில் ஓட முடியாது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

நெல்லிக்குப்பத்தை துணை வட்டமாக்கல்.

626—(*வினா எண். 5221)—திரு. துரை அன்பரசன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பண்ருட்டி வட்டத்திலுள்ள நெல்லிக்குப்பத்தை துணை வட்டமாக (Sub-taluk) ஆக்கும் உத்தேசம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

தென் மாவட்டங்களில் வருவாய் நீதிமன்றங்கள்.

627—(*வினா எண். 7771)—திரு. டி. ஆர். வேங்கடராமணன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடந்த இரண்டு ஆண்டுகளாக நெல்லை, மதுரை பிரிக்கப்படாத இராமநாதபுரம் மாவட்டங்களுக்காக தனியாக வருவாய் நீதிமன்றம் செயல்படாததால் பல வழக்குகள் தேங்கிக் கிடப்பதை அரசு அறியுமா?